கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கரூர் - அரவக்குறிச்சி - கிருஷ்ணராயபுரம் - குளித்தலை

# தொகுதிகளுக்குட்பட்ட பி.எல்.ஏ.-2 - பி.டி.ஏ. ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



கரூர், அக். 29.

'என் வாக்குச்சாவடி... வெற்றி வாக்குச்சாவடி' எனும் பெயரில் கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட BLA2 , BDA( பூத் IT Wing) ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு தலை குனியாது என் வாக்குச்சாவடி... வெற்றி வாக்குச்சாவடி கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராய புரம், குளித்தலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட BLA2 , BDA( பூத் IT Wing) ஆலோசனைக் கூட்டம் 29.10.2025 புதன் கிழமை மாலை 5.30 மணிக்கு கரூர் பிரேம் மஹாலில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் MLA, அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ MLA, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாம சுந்தரி MLA, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்பொறுப்பாளர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2, BDA( பூத் IT Wing), பூத் ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை பயிற்சிக் கூட்டம்

2. S.I.R. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து


இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் வென்று சாதனை!

# மகாராஜன் ஆறுமுகப் பாண்டியனுக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் — சமூக வலைதளப் பதிவு!




சென்னை,அக்.29-

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டி 2025-இல் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ள மகாராஜன் ஆறுமுகப்பாண்டியனைப் பாராட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு;

**கோவில்பட்டி என்றால் இனிப்பு, ஹாக்கி மட்டுமல்ல, பளு தூக்குதலும் இனி நம் நினைவுக்கு வரும்படி, Asian Youth Games 2025-இல் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ள தம்பி மகாராஜன் ஆறுமுகப்பாண்டியன் அவர்களுக்கு என் பாராட்டுகள்!**

**முத்தமிழறிஞர் கலைஞரின் சிலையைத் திறந்து வைக்க, கோவில்பட்டிக்கு நான் வந்திருக்கும் வேளையில், இந்த இனிய செய்தியைப் பார்த்து இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்கிறேன்.**

**உங்களின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கும், பயிற்சிக்கும் நமது திராவிட மாடல் அரசு துணைநிற்கும்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

# மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு !



மதுரை, அக். 29 -

மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 02.11.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 05.00 மணி அளவில் அண்ணாநகர் ட்வின்ஸ் மஹாலில், அவைத்தலைவர் மா.ஒச்சு பாலு தலைமையில் நடைபெறுகிறது.

எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

"என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சிக் கூட்டம் !

கழக ஆக்க பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

வெ.சு.சத்தியநாராயணன் தலைமை ! ஜே.ஜே.எபினேசர் - இரா.லட்சுமணன் - எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை!

# ஆர்.கே.நகர் முன்னாள் பகுதிச் செயலாளர் வெ.சுந்தரராஜன் நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி! நலஉதவிகள்!

## ஆர்.எஸ்.பாரதி - ஆர்.டி.சேகர் வழங்குகிறார்கள்!

## கலாநிதி வீராசாமி - இரா.கிரிராஜன் - ஐட்ரீம் ஆர்.மூர்த்தி பங்கேற்பு!

சென்னை அக்:29

ஆர்.கே.நகர் முன்னாள் பகுதி செயலாளர் வெ.சுந்தரராஜன் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நாளை (30.10.2025 வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் தண்டையார்பேட்டை மார்க்கெட் எல்லைமுத்தம்மன் கோவில் அருகில் நடைபெறுகிறது.

சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வெ.சு.சத்தியநாராயணன் தலைமையில் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர்

இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர்.வெற்றிவீரன், நேதாஜி யு.கணேசன் எம்.சி, இர.பொன்இளவரசன், கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி, இ.ரவிக்குமார், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, மு.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜன், ப.குமார், ச.தமிழ்ச்செல்வன், ஜெ.பிரேம்ஆனந்த், எம்.எம்.சாமி, பி.கே.மூர்த்தி, ஆர்.ரமேஷ், பி.அன்பழகன், வி.முத்து, கே.மோகன், சா.திருப்பதிசாமி, டி.ஆர். தணிகாசலம், மா.ரூபசங்கர், எரிமலை.பி.எல்.பாலு, பா.நரேஷ்குமார், வி.ஞானசேகரன், சி.மணிகண்டன், த.அறிவழகன்,

வட்ட செயலாளர் பொ.து.ராஜா, பவித்ராநரேஷ்குமார் எம்.சி, மோ.ரவிக்குமார், பிரசிடென்சி.சி.சதீஷ், ந.ம.மகேஷ்குமார், நி.எழிலரசன், எஸ்.சத்திஸ்வரி, ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதிவீராசாமி எம்.பி, ஆகியோர் நலஉதவிகள் வழங்குகின்றனர்.

இரா.கிரிராஜன் எம்.பி, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, தா.இளையஅருணா, ந.மனோகரன், இரா.கருணாநிதி, இரா.மதிவாணன், என்.மருதுகணேஷ், பி.டி. பாண்டிசெல்வம், இரா. நரேந்திரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, நாகம்மை கருப்பையா, வி.தயாளன், வ.பெ. சுரேஷ், இரா.செந்தில்குமார், க.ஜெயராமன், அ. முருகன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் வே. சிவக்குமார், நா.சண்முகம், சு.சேகர், கி.ராஜேந்திரன், ப.மதிவாணன், ஏ.தமிழ்ச்செல்வன், டி.கமலக்கண்ணன், க.அமுலு, மற்றும் டி.வி.முத்துக்கிருஷ்ணன், கு.நற்குணம், த.தமிழ்கொடி, எஸ்.பி.எஸ்.புத்தன், ரெயின்போ என்.விஜயகுமார் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்

ஏ.டி.மணி, ஒலி.ஒளி. ஆ.பாபு, வி.வி.ரமேஷ், எஸ். எம்.பரசுராமன், டாக்டர் வை.கலைவாணன், விமலா மோகன், லட்சுமிவேலு, லயன் எம்.தீனதயாளன், லியோ டி.சுரேஷ், பி.செந்தில்குமார், கார்த்திக் செங்குடுவன், ஜி.பி.மோகன்பாபு, த.சிவராமன், மு.அப்துல்ரகுமான், கூல் பாயிண்ட் பா. பிரகாஷ், கோ.சதீஷ், வெ. இன்பரசன், ஆ.மோகன், மற்றும் க.கோவிந்தசாமி, ஜி.சதிஷ்குமார், ஜே.கே. நாதன், மாமன்ற உறுப்பினர்கள்

க.தேவிகதிரேசன், குமாரிநாகராஜன், மணிமேகலை ஏழுமலை, க.ரேணுகா, மாஸ் டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம். லோகநாதன், தா.திரா விட செல்வி, பி.சீனிவாசன், கு. ரமேஷ், எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர். ராஜன், இரா.பாலன், க.கலைச்செல்வன், எஸ். ரமேஷ், எஸ்.சொக்கலிங்கம், ஜி.முகுந்தன், ஜி.ராஜா, டி.சங்கர், கே.ஜானகிராமன், எஸ்.ஜான்கென்னடி, பா. வேதாசலம், நாட்டாமை. கே.லட்சுமணன்ம், சுசசிதரன், இரா.பொன்முடி, பி. ரவிசங்கர், எல்.சீனிவாசன், கோ.நித்தியானந்தன், ப.அ.சண்முகம், எஸ். கே.இளங்கோ, கே.என். பார்த்திபன், எஸ்.ஜே.ராமு, ஆர்.மூர்த்தி, இரா.மகேந்திரன், டி.கணேசன், டி. லெனின், ஜி.அரிராமன், ஜெ. ஜான்நெல்சன், ஜே. வசந்தகுமார், பா.கோதண்டன், வி.அன்பரசு, எம்.அரிகிருஷ்ணன், ஏ.சுரேஷ், கே.எம்.சேகர், ஆர்.ஜெயகுமார், கே.குப்பன், மா.நல்லதம்பி, பா.அருண்குமார், எம்.கலைவாணி, ஜே. மகேஸ்வரி, இ.லட்சுமி, ஷீலாமோகன், வி.அருள், என்.பிரேமராசன், வானூர். கே.ராஜி, எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன், தே.ஜனார்த்தனன், கு.தமிழ்ச்செல்வன், மல்லா. சரவணன், ஆர்.ராஜா, ஜே.செந்தில்சாமி, எஸ். கிறிஸ்துராஜ், பிராங்க்ளின், சி.சிவக்குமார், தே.கண்ணன், நா.செல்வராஜ், டாக்டர்.வி.ஷாமிலி, கே. முத்தமிழ்செல்வன், சி.கார்த்திக், டி.சுரேஷ்குமார், ஏ.வெங்கடேஷ், ஜெ.ஜான்பிராங்க்ளின், ஆர்.ராதிகா,

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்: வெ.நந்தகோபால், ஜெ.சுரேஷ்பாபு, ஜெ. துரைபாபு, மு.பாலமுருகன், பா.அரிகிருஷ்ணன், ஆர்.சந்தோஷ் ஆர்.பாபு, பி.சதீஷ், பி.வி.கௌதம், பி.கார்த்திக், த.மாறன், எஸ்.அரசு, இரா.கண்ணன், ஜி.ஜானகிராமன், ஜி.பிரபாகரன், ஜி.உமாபதி, கொரியர்.எம்.முருகன், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடு: வெ.சு. பிரபாகரன், வெ.சு.சத்தியநாராயணன், ஆகியோர் நிகழ்ச்சிகான ஏற்பாட்டினை செய்துள்ளனர்.

---

புதுச்சேரி மாநிலத்தில்

# சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிக்கு தி.மு.க. எதிர்ப்பு!

## துணைத் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் — எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா மனு!

புதுச்சேரி, அக்.29-

இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்திவுள்ளபடி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக புதுச்சேரியில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடனான கலந்தாலோசனைக் கூட்டம் ரெட்டியார்பாளையம் ஜெயா நகரில் உள்ள மாவட்ட தலைமைத் தேர்தல் அலுவலகத்தில் நேற்று மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது.

துணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி தில்லைவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திமுக சார்பில் மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா, அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மற்றும் காங்கிரஸ், என். ஆர்,காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அப்போது, தி.மு.க. சார்பில் துணைத் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் மனு ஒன்று அளிக்கப்பட்டது.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது: -

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் வாக்¬கா¬ளர் பட்¬டி¬யல் சிறப்பு தீவிர திருத்¬தப் (Special Intensive Revision) பணி நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அவசரகதியில் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. நடைமுறைச் சாத்தியம் இல்லாத வடகிழக்கு பருவமழை காலத்தில் வாக்காளர் திருத்தப் பணியை மேற்கொள்வது என்பது வாக்காளர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தும். வாக்காளர் பட்டியல் சீரமைக்கப்பட வேண்டும் என்பதை திமுக மறுக்கவில்லை. ஆனால் அதனை அவசர கதியில் செய்யக்கூடாது என்பது தான். எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் தேர்தலை வைத்துக் கொண்டு, இப்போது இதனைச் செய்ய தொடங்குவது சரியா என தேர்தல் ஆணையம் மறுபரிசீலனைச் செய்ய வேண்டும்.

இது தேர்தல் ஆணையம் தன்னிச்சையாக எடுத்த முடிவாகத் தெரியவில்லை. மக்களாட்சியின் மாண்பை சிதைப்பதை வழக்கமாக கொண்டுள்ள ஒன்றிய பாஜக அரசு தன்னாட்சி பெற்ற அமைப்புகளை தங்கள் விருப்பத்திற்கு வளைத்து செயல்படுத்தி வருவதுபோல், தேர்தல் ஆணையத்தையும் ஆட்டிப் படைக்கிறது.

அதனால் தான் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் அனைத்தும் சமீபகாலமாக சர்ச்சைக்குரியதாகவும், சந்தேகத்திற்குரியதாகவும் இருக்கின்றன.

முறையான தேர்தல், வெளிப்படையான தேர்தல், நேர்மையான தேர்தல், உண்மையான தேர்தல் நடத்தி வந்த தேர்தல் ஆணையம் ஒன்றிய அரசின் உத்தரவுக்கு கட்டுப்பட்டு சந்தேகத்திற்குரிய தேர்தலை நடத்தி வருவதை தான் எங்கள் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் எதிர்க்கிறார்கள்.

அந்த வகையில் தேர்தல் ஆணையம் அவசர கதியில் வெளியிடப்பட்டுள்ள சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியை (Special Intensive Revision) தமிழகத்தைப் பின்பற்றி புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகமும் எதிர்க்கிறது என்பதை இக்கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

---

மேற்கு மண்டல கழகப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி தலைமையில்

# கோவை மாநகர் மாவட்ட பாக நிலை முகவர்கள் - பாக டிஜிட்டல் முகவர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் அறிக்கை!

கோவை, அக்.29-

கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை செந்தமிழ்ச் செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" தேர்தல் பிரச்சார பயிற்சி கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கோவை மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட , சிங்காநல்லூர், கோவை தெற்கு, கோவை வடக்கு ஆகிய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து பாக நிலை முகவர்கள் (BLA-2) மற்றும் பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA) கூட்டம் 30.10.2025 வியாழக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் 'ரீசாய் விவாகா மஹாலில் மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்கள் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது.

அதுசமயம் கோவை நாடாளுமன்ற உறுப்பினர், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழகப் பொறுப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள் (BLA-2), பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA), பாக ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ் செல்வன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் 7 வது மண்டலம், 88 வது வார்டில் பொதுமக்கள் பங்கேற்ற சிறப்புக் கூட்டம் நேற்று (28.10.2025) வார்டு மாமன்ற உறுப்பினர் ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது. பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து துறைகள் மற்றும் மெட்ரோ வாட்டர் துறையின் அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களின் குறைகளைத் தெரிவித்தனர்.

---

வடகிழக்குப் பருவமழையையொட்டி மழைநீரை வெளியேற்றும் வகையில்

# 1,496 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன!

## சென்னை மாநகராட்சி தகவல்!

சென்னை,அக்.29-

பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்குப் பருவமழையை யொட்டி மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை உடனடியாக வெளியேற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள்.

அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களில் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் 160 எண்ணிக்கையில் 100Hp மோட்டார் பம்புகள், 550 டிராக்டர்களில் பொருத்தப்பட்ட பம்புகள் உள்ளிட்ட பல்வேறு திறன் கொண்ட 1,496 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. மேலும் மழைநீர் வடிகால்களில் தேங்கியுள்ள கழிவுகளை அகற்ற 7 சூப்பர் சக்கர் வாகனங்களும் தயார் நிலையில் உள்ளன.

தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரானது இந்த நீரிறைக்கும் பம்புகளின் மூலம் அருகிலுள்ள மழைநீர் வடிகால்கள், கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகளுக்கு வெளியேற்றப்பட்டு வருகிறது.

இன்று (28.10.2025) காலை 11 மணி நிலவரப்படி, மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 22 டிராக்டர் பம்புகள் மற்றும் 100 Hp திறன் கொண்ட 19 டீசல் பம்புகள் மூலம் தேங்கியுள்ள மழைநீர் வெளியேற்றப்படுகிறது.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.77, கே.பி.பார்க் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் ஆய்வு மேற்கொண்டு, அங்கு தேங்கியிருக்கும் குப்பைகளை அகற்றவும், மழைநீரை வெளியேற்றவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவ்வாய்வின்போது சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.